

வேலூர் மாவட்டம் காட்பாடி தாராபடவேடு கழிஞ்சூர் ஏரியை – சுற்றுலா தலத்தை கழக பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ரூ.36.59 கோடி மதிப்பீட்டில்

# வேலூர் மாவட்டம் - காட்பாடியில் சுற்றுலா தலம்!

## அமைச்சர் துரைமுருகன் திறந்து வைத்தார்!

வேலூர், நவ. 19 -

வேலூர் மாவட்டம், காட்பாடி கழிஞ்சூர், தாராபடவேடு ஏரிகளை இணைத்து 6.2 கிலோ மீட்டர் நடைபாதை, படகு குழாம், செயற்கை மண் திட்டுக்கள் அமைத்து ரூ.36.59 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா தலமாக்கி அதனை பொதுமக்களுக்கு அர்ப்பணிக்கும் விழா, ரூ.20.90 கோடி மதிப்பீட்டில் காட்பாடி நகரில் 3 வெள்ள தடுப்பு பணிகள், கழிஞ்சூர் ஏரியின் உபரி நீர் கால்வாயின் தரைப்பாலம் பணிக்கு ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டு விழா நடந்தது.

விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலெட்சுமி தலைமை தாங்கி பேசினார். வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் முன்னிலை வகித்து அனைவரையும் வரவேற்று பேசினார்.

நீர்வளத்துறை தலைமை பொறியாளர் பொதுப்பணி திலகம் வரவேற்றார்.

சிறப்பு விருந்தினராக நீர்வளத்துறை அமைச்சர் - கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு சுற்றுலா தலத்தை பொது மக்களுக்கு அர்ப்பணித்தும், நலத்திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் சிறப்புரை ஆற்றினார். அப்போது அவர் பேசியதாவது;

அ.தி.மு.க. ஆட்சியில் கழிஞ்சூரில் மருத்துவமனை அமைக்க வேண்டும் என நினைத்தேன்.

அதனை அடுக்கம் பாறைக்கு கொண்டு சென்று விட்டனர். அதனால் கழிஞ்சூருக்கு ஏதாவது நலத்திட்டம் செய்ய வேண்டும் என்று நினைத்தேன். அது இப்போது கழிஞ்சூர், தாராபடவேடு ஏரிகளை இணைத்து சுற்றுலா தலமாக்கப் பட்டுள்ளது.

இதனை அதிகாரிகள் அற்புதமாக வடிவமைத்துள்ளனர். சுற்றுலா தலத்தை கொண்டு வருவது என்னுடைய வேலை. அதனை அசுத்தம் செய்யாமல் காப்பாற்ற வேண்டியது பொதுமக்களின் பொறுப்பு. ஏரியில் படகு விட வேண்டும் என கூறியுள்ளார்கள் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

காட்பாடி தொகுதியில் மாலை நேரத்தில் பொழுது போக்கும் இடமாக இந்த சுற்றுலா தளம் அமையும். மோர்தானா அணையை சுற்றுலாத் தலமாக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குடியாத்தம் ஆற்றில் ரூ.40 கோடி செலவு செய்து பாலம் கட்டப்பட்டுள்ளது. அங்கிருந்த ஆக்கிரமிப்பு வீடுகள் அப்போது இடிக்கப்பட்டது. இதனால் அப்போது திட்டினார்கள்.

இப்போது பாராட்டுகிறார்கள். வேலூர் சதுப்பேரி சுற்றுலா தலமாக்கும் பணி நடைபெற்று வருகிறது.

அணைக்கட்டில் விரைவில் அணை கட்டப்படும். பேர்ணாம்பட்டு பத்திரப்பல்லி அணை கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். வேலூர் மாவட்டம் நீண்ட நெடுங்காலமாக புறக்கணிக் கப்பட்டு வந்தது.

கடந்த 1971 ஆம் ஆண்டு நான் காட்பாடி தொகுதியில் சட்டமன்ற தேர்தலில் நின்ற போது பாலாற்றில் இருந்து தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தேன்.

அதற்காக குடிநீர் வடிகால் வாரியம் அமைப்பட்டு அது தற்போதும் காட்பாடி தொகுதியில் செயல்பட்டு வருகிறது. காட்பாடி தொகுதியில் தாலுகா அலுவலகம், 40 உயர்நிலை பள்ளிகள், துணை போலீஸ் சூப்பிரண்டு அலுவலகம், கோர்ட், சட்டக்கல்லூரி என எது தேவையோ அதனை கொண்டு வந்துள்ளேன்.

காட்பாடி தொகுதியில் நான் முதன்முதலாக போட்டியிட்ட போது பொன்னையில் ஆற்றுப் பாலம் கேட்டார்கள். அதனை 2 ஆண்டில் கட்டி முடித்து தலைவர் கலைஞரை கொண்டு வந்து திறந்து வைத்தேன். பல ஆண்டுகளுக்கு பின்னர் அந்த பாலம் இடிந்து விட்டது.

அதனை அ.தி.மு.க ஆட்சியில் கட்டவில்லை. நான் இப்பொழுது ரூ.48 கோடியில் புது பாலம் கட்டிக் கொடுத்துள்ளேன். பாலாற்றில் கவசம்பட்டு, டி.கே.புரம், குகைய நல்லூர், பரமசாத்து ஆகிய இடங்களில் தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளது. இதனால் தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது.

காட்பாடி டெல் தொழிற்சாலை எதிரிலும், மகிமண்டலத் திலும் சிப்காட் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. சேர்க்காட்டில் அரசு மருத்துவமனை, அரசு கலைக் கல்லூரி கொண்டு வந்துள்ளேன்.

சொல்லிய எதையும் விட்டுவிட வில்லை. காட்பாடி தொகுதி மேம்பாட்டில் யாரும் குறை சொல்லாத அளவு திட்டங்களை நிறைவேற்றி உள்ளேன். பெற்ற பெண்ணுக்கு திருமணம் என்றால் எப்படி மகிழ்ச்சி அடைவேனோ அதுபோல இன்று கழிஞ்சூர், தாராபடவேடு ஏரி சுற்றுலாத் தலத்தை திறந்து வைத்ததில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் மாவட்டப் பொருளாளர் சி.நர சிம்மன், குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலு விஜயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம். சுனில்குமார், மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா ஆகியோர் பேசினர். விழாவில் கமிஷனர் லட்சுமணன், ஒன்றிய செயலாளர் தணிகாசலம், மாநகராட்சி கவுன் சிலர்கள் அன்பு, விமலா சீனிவாசன், டீடா சரவணன், கே.ஜி.சீனிவாசன், பிரம்மபுரம் ஊராட்சி தலைவர் ராதாகிருஷ்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், பூட்டை கிராமத்தில் பெற்றோர் இருவரையும் இழந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு குழந்தைகளை தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர், திராவிட மாடல் நாயகர், சமூக நீதிக் காவலர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, நிதியுதவி வழங்கி, அக்குழந்தைகளின் கோரிக்கைகளை முழுமையாக நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார், உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர் உள்ளார்கள்.

# ‘முனைவர்’ ஆன அமைச்சர் அன்பில் மகேஸ்!












சென்னை, நவ.19 -

தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரியின் உடற்கல்வியியல் துறையில் 2021ஆம் ஆண்டு முதல் “உடற்கல்வி இயந்திரக் கற்றல் வழியாகப் பள்ளி மாணவர்களுக்கு திறன்மிகு கற்றல் (Physical Activity for Skill Development Through Machine Learning)” என்ற தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொண்டு வந்தார்.

இதன் ஒரு பகுதியாக நவம்பர் 17ஆம் தேதி மாலை 4.30 மணியளவில் திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரியின் உள்விளையாட்டு அரங்கில் அவருக்கு முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வு (VIVA -VOCE Examination) நடைபெற்றது.

இறுதியில் External Examiner Dr.S.Thirumalai Kumar (Tamilnadu physical education and Sports University) முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி” என அறிவித்தார்.

திருச்சி தேசியக் கல்லூரியின் துணை முதல்வர் மற்றும் உடற்கல்வியியல் துறை இயக்குநர் முனைவர் து.பிரசன்ன பாலாஜி வழிகாட்டுதலின் கீழ் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

உடற்கல்வி செயல்பாடுகள் பள்ளிக் குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு எவ்வாறு உதவுகின்றன? கணினிசார் நுண்ணறிவுத் தொழில்நுட்பம் கற்றலுக்கு எவ்வாறு உதவுகிறது? என்பதை இந்த ஆய்வு பகுப்பாய்வு செய்தது. மேலும் உடற்கல்வி செயல்பாடுகள் குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியில் ஏற்படுத்தும் தாக்கத்தை இயந்திரக் கற்றல் (Machine Learning) தொழில்நுட்பத்தின் மூலம் ஆராயும் வகையிலும் அமைந்தது.

### விளாத்திகுளம் தொகுதியில்

# 363 குடியிருப்புக்கான குடிநீர்த் திட்டம்!

## ஜீ.வி.மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ. ஆய்வு!

விளாத்திகுளம், நவ. 19 -

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக செயல்படுத்தப்படும் 363 ஊரக குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டம் செயல்படுத்துவது குறித்து கே.சண்முக புரம் கிராமத்தில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ. வி. மார்கண்டேயன் ஆய்வு மேற்கொண்டனர்.

நிகழ்வில் தூத்துக்குடி மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராதாகிருஷ்ணன், எப்போதும்வென்றான் சோலைசாமி, அறங்காவலர் குழு தலைவர் முத்துக்குமார்,

வடக்கு மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் முத்துராஜ், வடக்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஆகாஷ்பாண்டியன் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 89வது நினைவு நாளை முன்னிட்டு நேற்று (18.11.2025) பரமக்குடி வ.உ.சி மகாலில் உள்ள அவரது திரு உருவச் சிலைக்கு பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் தலைமையில் கழக நிர்வாகிகள் திரளாக பங்கேற்று மரியாதை செய்தனர். இதில் முன்னாள் அமைச்சர் சுந்தர்ராஜன், பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, போகலூர் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் வழக்கறிஞர் குணசேகரன், வடக்கு நகர் கழகச் செயலாளர் ஜீவரத்தினம், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.எம்.டி அருளானந்த்,மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் நகர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களின் 89 வது நினைவு நாளை முன்னிட்டு நெல்லை மாநகராட்சி எதிரில் அமைந்துள்ள அவரது மணிமண்டபத்தில் உள்ள முழு திருவுருவச் சிலைக்கு சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. உடன் மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ., மேயர் இராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ்,முன்னாள் அமைச்சர் மைதீன்கான், கழக நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பலர் உள்ளனர்.